இலங்கை

கணக்கீட்டுத் தொழிநுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2025

# முன்னோடி வினாத்தாள்

# மட்டம் 02

## 2801 – நிதி மற்றும் கிரயக் கணக்கீடு (FCA)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

## 2801 – நிதி மற்றும் கிரயக் கணக்கீடு (FCA)
## முன்னோடி வினாத்தாள்

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்
விடையெழுத : 03 மணித்தியாலம்

**வினாத்தாள் கட்டமைப்பு:**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது: பகுதி **A**, பகுதி **B** மற்றும் பகுதி **C**.
- பகுதி **A**, பகுதி **B** மற்றும் பகுதி **C** ஆகியவற்றிலுள்ள அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

| **பகுதி** | **புள்ளிகள்** |
|---|---|
| பகுதி A | 25 |
| பகுதி B | 50 |
| பகுதி C | 25 |
| **மொத்தம்** | **100** |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளுக்கான சித்திப் புள்ளி 50 ஆகும்.

**விடைகள்:**

- அனைத்து விடைகளும் உங்களுக்குத் தரப்படுகின்ற விடைத்தாள் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். வினாத்தாளிலேயே எழுதப்படும் விடைகள் புள்ளியிடுவதற்காகக் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான உங்கள் விடையை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- அனைத்துச் செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களில் எழுத வேண்டாம்.

**விடைத்தாள் புத்தகம்:**

- ஒவ்வொரு விடைத்தாள் புத்தகத்தினதும் முகப்பு அட்டையில் அறிவுறுத்தல்கள் காட்டப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- பரீட்சார்த்திகள் குறியீட்டு அட்சரகணிதம் மற்றும் வகையீடுகளுக்கான வசதிகளற்ற எந்தவொரு கணிப்பானையும் பயன்படுத்தலாம். நிரற்படுத்தத்தக்க கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**இணைப்பு:**

- செயல் வினைச்சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் (OTQ's தவிர) கொண்டிருக்கும்.
- மாணவர்கள் சரிபார்ப்புப் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**
**பத்து (10) கட்டாய வினாக்கள்**

**பகுதி A**

(மொத்தம் 25 புள்ளிகள்)

***வினா 01***

இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கான மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடைகளின் இலக்கங்களை அவற்றுக்குரிய வினா இலக்கங்களுடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.

**1.1** பின்வருவனவற்றில் கிரயக் கணக்கீட்டின் நோக்கெல்லை மற்றும் நோக்கங்களைச் சிறப்பாக விபரிப்பது எது?

(1) வெளிவாரி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக நிதிப் பரிவர்த்தனைகளை மாத்திரம் பதிவு செய்தல்.

(2) உற்பத்திக் கிரயத்தைத் தீர்மானித்தல், கட்டுப்பாட்டுக் கிரயங்கள் மற்றும் தீர்மானமெடுப்பதில் உதவுதல்.

(3) உற்பத்திச் செயன்முறையில் விரயங்களைக் குறைத்தல்.

(4) மனித வளங்கள் மற்றும் ஊழியர் செயலாற்றுகை மதிப்பீடுகளை முகாமை செய்தல். (02 புள்ளிகள்)

**1.2** **ABC Ltd.** இனால் 2022 ஏப்ரல் 01 இல் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு மோட்டார் வாகனம் 2025 செப்ரெம்பர் 30 இல் ரூ. 2,400,000/- இற்கு விற்கப்பட்டது. மோட்டார் வாகனத்தின் கிரயம் ரூ.3,200,000/- ஆக இருந்தது. கம்பனியானது மோட்டார் வாகனங்களை கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு 20% இல் தேய்மானஞ் செய்கிறது எனின் மோட்டார் வாகன விற்பனை மீதான இலாபம் :

(1) ரூ. 1,120,000/-.
(2) ரூ. 800,000/-.
(3) ரூ. 1,200,000/-.
(4) ரூ. 1,440,000/-. (02 புள்ளிகள்)

**1.3** 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க :

**(a)** அனைத்துப் பங்காளர்களும் மூலதனத்திற்குச் சமமாகப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

**(b)** ஏற்கனவேயுள்ள அனைத்துப் பங்காளர்களினதும் சம்மதமின்றி ஒரு புதிய பங்காளரை வணிகத்தினுள் உள்ளீர்க்க முடியாது.

**(c)** வணிகத்தைப் முகாமை செய்வதற்காக பங்காளர்கள் சம்பளம் பெற உரித்துடையவர்கள்.

மேலுள்ளவற்றில், பங்குடமை தொடர்பில் சரியான கூற்று / கூற்றுக்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.
(2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.
(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.
(4) மேற்கூறிய யாவும். (02 புள்ளிகள்)

**1.4** பின்வருவனவற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான உதாரணமாக அமைவது எது?

(1) வாகனத் தயாரிப்புக் கம்பனி ஒன்றிலுள்ள பகுதியளவில் பூரணப்படுத்தப்பட்ட ஒரு வாகனம்.

(2) தளபாடக் கடையொன்றில் விற்பனைக்காக வைத்திருக்கப்படும் தளபாடம்.

(3) அலுவலகப் பாவனைக்காக வைத்திருக்கப்படும் கணினிகள்.

(4) மேற்கூறிய யாவும். (02 புள்ளிகள்)

**1.5** பின்வருவனவற்றில் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்படாத கணக்கீட்டு முறைமைகளைச் சரியாக வேறுபடுத்துகின்ற கூற்று எது?

(1) ஒருங்கிணைந்த முறைமையில், கிரய மற்றும் நிதிக் கணக்குகளுக்கு தனித்தனியான ஏடுகள் பேணப்படுகின்றன.

(2) ஒருங்கிணைக்கப்படாத முறைமையில், நிதி மற்றும் கிரயப் பரிவர்த்தனைகள் இரண்டையும் ஒரு தனியான தொகுதி ஏடுகள் பதிவு செய்கின்றன.

(3) ஒருங்கிணைந்த முறைமைகள் கிரய மற்றும் நிதிக் கணக்குகளுக்கிடையே கணக்கிணக்கத்திற்கான தேவையை நீக்குகின்றன.

(4) ஒருங்கிணைக்கப்படாத முறைமைகள் கிரயத் தரவுகளிலிருந்து நிதி அறிக்கைகள் தன்னியக்கமாக உருவாக்கப்படுவதை அனுமதிக்கின்றன. (02 புள்ளிகள்)

இல. **1.6** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கான விடைகளை, வினா இலக்கத்துடன் உமது விடைத்தாள் புத்தகத்தில் எழுதுக.

**1.6** **ABC கிரயவியல்** (ABC Costing) என்பதால் யாது கருதப்படுகிறது என்பதைச் சுருக்கமாக விபரிக்குக**.** (02 புள்ளிகள்)

**1.7** **XYZ (Pvt) Ltd.** என்பது பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி ஆகும். பின்வரும் தகவல்கள் 2025 மார்ச் மாதத்திற்காக **XYZ (Pvt) Ltd.** இன் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ரூ.** |
|---|---|
| விற்பனைகள் (VAT நீங்கலாக) | 1,367,000 |
| கடன் கொள்வனவுகள் (VAT நீங்கலாக) | 696,000 |
| விற்பனைத் திரும்பல்கள் (VAT நீங்கலாக) | 23,450 |
| 2025 மார்ச் 01 இல் VAT கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவு மீதி | 24,000 |

பொருத்தமான VAT வீதம் 18% ஆகும்.

2025 மார்ச் 31 இல் செலுத்த வேண்டிய VAT மீதியைக் கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.8** **A** யும் **B** யும் இலாப நட்டங்களை முறையே 3 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும் ஒரு பங்குடமை வியாபாரத்தின் பங்காளர்களாவர். 2025 சனவரி 01 இல், "**C**" என்பவர் ஒரு புதிய பங்காளராக இணைந்து கொண்டார். புதிய பங்காளரின் இணைவுடன், நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டன. 2025 சனவரி 01 இல், முன்கொணரற் பெறுமதி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுத் தொகை என்பன முறையே ரூ. 8,600,000/- உம் ரூ. 9,000,000/- உம் ஆகும்.

நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீள்மதிப்பீட்டிற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்குக.

(03 புள்ளிகள்)

**1.9** ஒரு கம்பனி இருப்புகளை மதிப்பிடுவதற்கு AVCO (சராசரிக் கிரயம்) முறையைப் பயன்படுத்துகிறது. 2025 டிசெம்பர் மாத காலப்பகுதியில் கீழ்வரும் பரிவர்த்தனைகள் இடம்பெற்றுள்ளன :

| **திகதி** | **விபரம்** | **அலகு** | **அலகுக் கிரயம் (ரூ.)** |
|---|---|---|---|
| டிசெம்பர் 01 | ஆரம்ப இருப்பு | 100 | 10 |
| டிசெம்பர் 05 | கொள்வனவு | 200 | 13 |
| டிசெம்பர் 10 | விநியோகம் | 150 | ? |
| டிசெம்பர் 15 | கொள்வனவு | 100 | 14 |

2025 டிசெம்பர் 31 இல் இறுதி இருப்பின் பெறுமதியை AVCO முறையைப் பயன்படுத்திக் கணிக்குக.

(04 புள்ளிகள்)

**1.10** கீழ்வரும் தகவல்கள் பணி இல. **X10000** தொடர்பில் **Rose Ltd.** இன் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டுள்ளன**:**

| | |
|---|---|
| நேர் மூலப் பொருள் | 8,500 கிலோகிராம் - கிலோகிராமொன்று ரூ. 300/- விலையில் |
| நேர் கூலி – பிரிவு A | 450 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூ. 800/-. |
| – பிரிவு B | 800 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூ.900/-. |
| உற்பத்தி மேந்தலை | மொத்த நேர் கூலிக் கிரயத்தில் 120%. |

கம்பனி விற்பனை விலை மீது 20% இலாபத்தைப் பேணுகிறது.

பணி இல. **X10000** மீது வசூலிக்கப்பட வேண்டிய விலையைக் கணிக்குக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

***பகுதி A முடிவு***

## ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

**பகுதி B**

### *வினா 02*

(A) பொம்மை உற்பத்தி நிறுவனமொன்றின் **பொருள் 111** தொடர்பான கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| வருடாந்தக் கேள்வி | 11,250 அலகுகள் |
| கட்டளையிடற் கிரயம் | கட்டளை ஒன்றிற்கு ரூ. 500/- |
| அலகொன்றின் கொள்வனவு விலை | ரூ. 50/- |
| நிறுத்திவைத்தல் கிரயம் | ஆண்டொன்றிற்கு கொள்வனவு விலையில் 10% |
| பயன்பாடு | 200 - 300 அலகுகள் |
| விநியோகத்திற்கான கால அவகாசம் (கட்டளைக் காலம்) | 4 - 6 மாதங்கள் |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக.**

(a) சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ). (02 புள்ளிகள்)

(b) மறு – கட்டளை மட்டம். (02 புள்ளிகள்)

(c) ஆகக்குறைந்த இருப்பு மட்டம். (02 புள்ளிகள்)

(B) **Star Ltd.** இன் 2025 டிசெம்பர் மாத இறுதி வாரத்திற்கான ஓர் ஊழியரின் கூலி விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| அடிப்படை மணித்தியாலக் கூலி வீதம் | ரூ. 180/- |
| ஓர் அலகை உற்பத்தி செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட நியம நேரம் | 15 நிமிடங்கள் |
| இறுதி வாரத்தில் ஊழியரால் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை | 180 அலகுகள் |
| வாரமொன்றுக்கான உண்மையான வேலை மணித்தியாலங்கள் | 40 மணித்தியாலங்கள் |
| மிகையூதியம் | அடிப்படை வீதத்தில் சேமிக்கப்பட்ட மணித்தியாலங்களில் 150%. |

மேற்படி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு,

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2025 டிசெம்பர் மாத இறுதி வாரத்திற்கான ஊழியரின் மொத்தச் சம்பாத்தியத்தைக் **கணிக்குக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 03*

**ABC Footwear Ltd.** ஆனது **பொருள் X** ஐ உற்பத்தி செய்கிறது. இது இரண்டு உற்பத்திப் பிரிவுகளையும் (**A1, A2**) ஒரு சேவைப் பிரிவையும் (**S1**) கொண்டுள்ளது :

இக்கம்பனி 2026 ஏப்ரல் மாதத்திற்காகப் பாதிடப்பட்ட உற்பத்தி மேந்தலைகளை கீழ்வருமாறு மதிப்பிட்டுள்ளது :

| **கிரய உருப்படி** | **கிரயம் (ரூ.)** |
|---|---:|
| மின்சாரம் | 540,000 |
| வாடகை | 210,000 |
| ஊழியர் சேமநலன் | 270,000 |
| இயந்திரம் மீதான தேய்மானம் | 90,000 |
| கட்டடத்திற்கான காப்புறுதி | 180,000 |
| இயந்திரத்திற்கான காப்புறுதி | 120,000 |

2026 ஏப்ரல் மாதத்திற்கான கீழ்வரும் பாதிடப்பட்ட தரவுகள் தரப்பட்டுள்ளன :

| | **A1** | **A2** | **S1** | **மொத்தம்** |
|---|---:|---:|---:|---:|
| நேரில் பொருள் கிரயம் (ரூ.) | 600,000 | 700,000 | 200,000 | 1,500,000 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 20 | 25 | 5 | 50 |
| இயந்திரத்தின் பெறுமதி (ரூ.) | 8,000,000 | 10,000,000 | 6,000,000 | 24,000,000 |
| மின்சாரப் பாவனை (கிலோவாற்று) | 10,000 | 7,000 | 3,000 | 20,000 |
| பயன்படுத்தப்பட்ட தரைப் பரப்பு (சதுர அடி) | 2,000 | 2,500 | 500 | 5,000 |
| கிரயப் பகிர்வு - **S1** | 60% | 40% | - | - |
| நேர் கூலி மணித்தியாலங்களின் எண்ணிக்கை | 18,000 | 12,000 | - | 30,000 |
| பொருளொன்றின் நேர் கூலி மணித்தியாலங்களின் எண்ணிக்கை | 3 | 2 | - | - |

பொருளொன்றின் மதிப்பிடப்பட்ட முதன்மைக் கிரயம் ரூ. 360/-.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் மேந்தலைகள் எவ்வாறு ஒதுக்கப்பட்டு, பகிரப்படுகின்றன என்பதைக் காட்டும் கூற்றைத் **தயாரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) ஒரு பொருளுக்கான மதிப்பிடப்பட்ட மொத்த உற்பத்திக் கிரயத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### *வினா 04*

**தனுக்க, தரிந்து, கசுன்** ஆகியோர் இணைந்து, இலாப, நட்டங்களை முறையே 3 : 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டு, 2025 சனவரி 01 இல் **DTK Escapes** (வனப் பயணங்கள் தொடர்பான வணிகம்) என்ற ஒரு பங்குடமை வியாபாரத்தை ஆரம்பித்தனர்.

(1) பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றை உள்ளடக்குகிறது :

- பங்குடமையை முகாமை செய்வதற்கு **கசுன்** பொறுப்பாக உள்ளதுடன் அவர் மாதாந்தச் சம்பளமாக ரூ. 80,000/- ஐப் பெற உரித்துடையவர்.
- பங்காளர்கள் தொடக்கத்தில் உள்ளிட்ட மூலதனத்தின் மீது ஆண்டிற்கு 8% இல் மூலதனம் மீதான வட்டிக்கு உரித்துடையவர்கள்.
- வணிகத்திற்கு பங்காளர்களால் வழங்கப்பட்ட கடன்கள் மீதான வட்டி ஆண்டிற்கு 10% ஆகும்.

(2) **தரிந்துவிற்குச்** சொந்தமான ஒரு ஜீப் வண்டி 2025 அக்டோபர் 01 ஆந் திகதியில் இருந்து வனப் பயணச் சவாரிக்காக வணிகத்தால் பயன்படுத்தப்படுகிறது. வாகன வாடகையாக மாதாந்தம் ரூ. 60,000/- இனைப் பெற அவர் உரித்துடையவர். ஆண்டுடன் தொடர்புடைய தொகை செலுத்தப்படவில்லை என்பதுடன் அது தொடர்பில் கணக்குகளில் பதியப்படவுமில்லை.

(3) 2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த வருமானம் மற்றும் நிகர இலாபம் என்பன முறையே ரூ. 7,200,000/- உம் ரூ. 5,100,000/- உம் ஆகும்.

(4) 2025 யூலை 01 இல் **தனுக்கவினால்** பங்குடமைக்கு ரூ. 1,800,000/- கடன் வழங்கப்பட்டது. 2026 சனவரி மாதத்தில் செலுத்தப்பட்ட ஆண்டிற்கான வட்டி இன்னும் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(5) கீழ்வரும் மீதிகள் பங்குடமையின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

*(ரூ.'000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| 2025 சனவரி 01 இல் உள்ளிடப்பட்ட மூலதனம் : | | |
| **தனுக்க** | | 1,200 |
| **தரிந்து** | | 900 |
| **கசுன்** | | 600 |
| கடன் – **தனுக்க** | | 1,800 |
| ஆண்டின்போது எடுப்பனவுகள் : | | |
| **தனுக்க** | 500 | |
| **கசுன்** | 350 | |

(6) 2025 டிசெம்பர் 31 இல், **கசுன்** பங்குடமையில் இருந்து விலகத் தீர்மானித்ததுடன் **தனுக்கவும் தரிந்துவும்** இலாப, நட்டங்களை முறையே 3 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டு, அதே பெயரில் பங்குடமையைத் தொடரத் தீர்மானித்தனர்.

(7) பங்குடமையின் நன்மதிப்பு 2025 டிசெம்பர் 31 இல் ரூ. 3,600,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இதனை நன்மதிப்புக் கணக்கில் காட்டாது பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் ஊடாகச் சீராக்கம் செய்தல் வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக **DTK Escapes** கம்பனிக்கான கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) இலாப, நட்டப் பகிர்வுக் கணக்கு. (04 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் மூலதன மற்றும் நடைமுறைக் கணக்குகள். (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 05*

2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **கோல்டன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்துடன்** தொடர்புடைய கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன.

இக்கழகம் 2025 டிசெம்பர் 31 இல் 540 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த அங்கத்துவச் சந்தாக் கட்டணம் ரூ. 3,000/- ஆகும்.

அங்கத்துவச் சந்தாக் கட்டண விபரங்கள் கீழ்வருமாறு :

- 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 10 அங்கத்தவர்கள் 2024 ஆம் ஆண்டிற்குரிய அங்கத்துவச் சந்தாக் கட்டணங்களைச் செலுத்தியிருந்தனர்.
- 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 2 அங்கத்தவர்கள் 2026 ஆம் ஆண்டிற்குரிய அங்கத்துவச் சந்தாக் கட்டணங்களைச் செலுத்தியிருந்தனர்.
- 2025 டிசெம்பர் 31 இல் 6 அங்கத்தவர்களின் சந்தாக் கட்டணங்கள் நிலுவையாக இருந்தன.

**2025 டிசெம்பர் 31 இலான பரீட்சை மீதியின் பிரித்தெடுப்பு** *(ரூ.'000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற அங்கத்துவச் சந்தா | | 1,638 |
| உணவக வருமானம் | | 420 |
| உணவகச் செலவினங்கள் | 280 | |
| சம்பளங்கள் | 100 | |
| பழுதுபார்ப்புகளும் பராமரிப்பும் | 45 | |
| மின்சாரம் | 30 | |
| விளையாட்டு உபகரணம் | 75 | |
| 2025 சனவரி 01 இல் விளையாட்டு உபகரணங்கள் மீதான திரண்ட தேய்மானம் | | 18 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 125 | |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன :

(1) 2025 டிசெம்பர் மாதத்திற்கான மின்சாரக் கட்டணப் பட்டியல் ரூ. 5,000/- ஆனது கணக்கேடுகளில் கணக்கிற் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

(2) பழுதுபார்ப்பும் பராமரிப்பும் 2025 யூலை 01 இல் செய்யப்பட்ட ரூ. 20,000/- பெறுமதியான அச்சுப் பொறியின் கொள்வனவை உள்ளடக்கியுள்ளது.

(3) விளையாட்டுக் கழகமானது விளையாட்டு உபகரணங்களையும் அலுவலக உபகரணங்களையும் கிரயத்தில் ஆண்டிற்கு 20% இல் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்கிறது.

2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக.**

(a) அங்கத்தவர்களின் சந்தாக் கணக்கு (04 புள்ளிகள்)

(b) வருமான, செலவினக் கணக்கு (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 06*

**சேனக** என்பவர் **சேனக என்டபிரைசஸ்** என்ற பெயரில் ஒரு சிறிய வணிகத்தை நடத்துகிறார். அவர் முறையான கணக்கேடுகளைப் பேணவில்லை. எவ்வாறாயினும், கீழ்வரும் தகவல்கள் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகக் கிடைக்கப் பெற்றுள்ளன.

**சேனக என்டபிரைசஸ்** இன் பிற சொத்துக்களும் பரிப்புக்களும் பின்வருமாறு: *(ரூ.)*

| இல் | 2024 ஏப்ரல் 01 | 2025 மார்ச் 31 |
|---|---|---|
| காசு மற்றும் வங்கி மீதி | 37,000 | ? |
| வியாபார வருமதிகள் | 60,000 | 72,000 |
| இருப்பு | 80,000 | 90,000 |
| தளபாடமும் பொருத்துகளும் - கொண்டு செல்லல் பெறுமதியில் | 100,000 | 90,000 |
| வியாபார சென்மதிகள் | 40,000 | 35,000 |
| வங்கிக் கடன் | 50,000 | 30,000 |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன.

(1) அனைத்துத் கொள்வனவுகளும் விற்பனைகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(2) ஆண்டின் காலப்பகுதியில் வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்த காசு ரூ. 750,000/-.

(3) ஆண்டின் காலப்பகுதியில் வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள் ரூ. 500,000/-.

(4) ஆண்டின் காலப்பகுதியில் செலுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவினங்கள் ரூ. 120,000/-.

(5) ஆண்டின் காலப்பகுதியில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு எவ்வித சேர்த்தல்களோ, அகற்றல்களோ செய்யப்படவில்லை.

(6) ஆண்டின் காலப்பகுதியில் எடுப்பனவுகள் ரூ. 40,000/-.

(7) அட்டுறுச் செலவினம் ரூ. 15,000/- ஆனது 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான கணக்கேடுகளில் கணக்கிற் கொள்ளப்படவில்வை.

(8) ஆண்டிற்கான கடன் வட்டி ரூ. 8,000/- ஆக இருந்ததுடன் இது ஆண்டின் காலப்பகுதியில் செலுத்தப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(a) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வணிகத்தின் நிகர இலாபம். (06 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இல் மூலதன (உரிமையாண்மை) மீதி. (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *பகுதி B முடிவு*

**ஒரு (01) கட்டாய வினா**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## பகுதி C

### *வினா 07*

2025 மார்ச் 31 இல் **Pinewell (Pvt) Ltd.** இன் பரீட்சை மீதி பின்வருமாறு: *(ரூ.)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| 2024 ஏப்ரல் 01 இல் குறிப்பிடு மூலதனம் (200,000 சாதாரண பங்குகள்) | | 2,000,000 |
| 2024 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 400,000 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் : | | |
| காணியும் கட்டடமும் (காணியின் பெறுமதி ரூ. 1.2 மில்லியன்) | 2,000,000 | |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,800,000 | |
| 2024 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் : | | |
| பொறி மற்றும் இயந்திரம் | | 400,000 |
| கட்டடங்கள் | | 100,000 |
| 2025 மார்ச் 31 இல் இருப்பு | 720,000 | |
| விற்பனைக் கிரயம் | 2,655,000 | |
| விற்பனைகள் | | 6,340,000 |
| விற்பனைத் தரகு | 220,000 | |
| விளம்பரப்படுத்தல் செலவினங்கள் | 220,000 | |
| அச்சிடலும் காகிதாதிகளும் | 180,000 | |
| மின்சாரம் | 120,000 | |
| காப்புறுதி | 150,000 | |
| அலுவலக வாடகை | 180,000 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 900,000 | |
| காசும் வங்கி மீதியும் | 390,000 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 1,300,000 | 750,000 |
| வங்கிக் கடன் (ஆண்டிற்கு 12%) | | 1,000,000 |
| பொது ஒதுக்கம் - 2024 ஏப்ரல் 01 இல் | | 100,000 |
| செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் | | 40,000 |
| வியாபார வருமதிகளுக்கான விடுதொகை –2024 ஏப்ரல் 01 இல் | | 50,000 |
| முன்செலுத்திய வாடகை | 20,000 | |
| செலுத்திய வருமான வரி | 325,000 | |
| | **11,180,000** | **11,180,000** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2025 மார்ச் 31 இல் இருப்புகளின் நிகர தேறத்தக்க பெறுமதி (NRV) ரூ. 700,000/- ஆக இருந்தது.

(2) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கிரயத்தில் நேர்கோட்டு முறையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும். ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலங்கள் பின்வருமாறு :

| | |
|---|---|
| கட்டடங்கள் | 20 ஆண்டுகள் |
| பொறி மற்றும் இயந்திரம் | 04 ஆண்டுகள் |

(3) ரூ. 60,000/- வணிகத்திற்குத் தர வேண்டியிருந்த ஒரு கடன்பட்டோர் 2025 ஏப்ரல் 10 ஆந் திகதி வக்கற்றவராக (bankrupt) அறிவிக்கப்பட்டார். எனவே அத்தொகை அறவிட முடியாக் கடனாக பதிவழிப்புச் செய்யப்பட வேண்டும். மேலும், 2025 மார்ச் 31 இல் உள்ள வியாபார வருமதிகள் மீதியில் 5% இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகையைப் பேண கம்பனி தீர்மானித்தது.

(4) 2024 யூலை 01 இல், கம்பனி ஆண்டிற்கு 12% வட்டியில் ரூ. 1 மில்லியன் வங்கிக் கடனொன்றைப் பெற்றுக் கொண்டது. இக்கடனுக்கான மூலதனத் தொகையைச் செலுத்துவதற்கு ஒரு வருட சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கம்பனி ஆண்டிற்கான தொடர்புடைய வட்டியைச் செலுத்தியிருக்கவில்லை. கடனின் ¼ பங்கானது நிதியாண்டு 2025/26 இல் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.

(5) கீழ்வரும் முற்கொடுப்பனவுகளும் அட்டுறுக்களும் கணக்கேடுகளில் 2025 மார்ச் 31 இல் இன்னும் கணக்கிற் கொள்ளப்படவில்லை :

| | ரூ. |
|---|---|
| முன்செலுத்திய காப்புறுதி | 40,000 |

(6) முன்செலுத்திய வாடகைத் தொகை 2024 ஏப்ரல் மாதத்திற்கான வாடகையுடன் தொடர்புடையதாகும். இது 2024 மார்ச் மாதத்தில் செலுத்தப்பட்டது.

(7) 2025 மார்ச் 31 இல், பணிப்பாளர் சபை ரூ. 500,000/- தொகையை பொது ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றத் தீர்மானித்தது.

(8) பரிப்புகளின் கீழ் காட்டப்பட்ட செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூ. 40,000/- ஆனது 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வுடன் தொடர்புடையதாகும். இந்தத் தொகை 2024/25 ஆம் ஆண்டில் இன்னும் செலுத்தப்படாதுள்ளது. 2024/25 இற்கான கணக்காய்வுக் கட்டணம் ரூ. 50,000/- இன்னும் பதிவு செய்யப்படவில்லை.

(9) வரி மதிப்பாண்டு 2024/25 இற்கான கம்பனியின் வருமான வரிப் பரிப்பு ரூ. 427,000/- ஆகும். அந்தத் தொகையில் ரூ. 325,000/- ஆனது காலாண்டுத் தவணைப் பணமாக ஆண்டின் காலப்பகுதியில் செலுத்தப்பட்டுள்ளது.

(10) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2025 மே 31 இல் பணிப்பாளர் சபையால் அதிகாரம் அளிக்கப்பட்டன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

முகாமையின் பாவனைக்காக **Pinewell (Pvt) Ltd.** இன் பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் கூற்றைத் (முற்றடக்க வருமானம்) **தயாரிக்குக.** (13 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இல் நிதி நிலைக் கூற்று. (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

***பகுதி C முடிவு***

## செயல் வினைச் சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல்

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **நினைவிற் கொள்ளல்**<br><br>உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக்கருக்கள் , அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல் | அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify) | யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல் | தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல் |
| | வரையறுக்க (Define) | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல் |
| | ஏற்பிசைவு செய்க (Recognize) | முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு | முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல் |
| | குறிப்பிடுக/ கூறுக (State) | தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு | பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல் |
| | பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List) | பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர் | பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல் |
| | பதிவு செய்க (Record) | ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல). | தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல் |
| **விளங்கிக் கொள்ளல்**<br><br>தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல் | கட்டியெழுப்புக (Construct) | கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல் | வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல் |
| | வேறுபடுத்துக (Differentiate) | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல் | எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல் |
| | கலந்துரையாடுக / ஆராய்க (Discuss) | ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல் | பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல் |
| | விபரிக்க (Explain) | எதையாவது பெரியளவில் விரிவாகத் தெளிவுபடுத்தல் | தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல் |
| | எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக (Illustrate) | ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல் | பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல் |
| | உட்பொருளை விளக்குக (Interpret) | தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல் | உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல் |
| | விளக்குக (Describe) | ஏதாவதொன்றின் விரிவான விளக்கம் | கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல் |
| | பொழிப்பாக்குக (Summarise) | பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று | பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல் |
| **பிரயோகித்தல்**<br><br>கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது.. | பிரயோகிக்க (Apply) | ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல் | ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல் |
| | கணிக்குக / கணிப்பீடு செய்க (calculate) | கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல் | ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல் |
| | தீர்மானிக்க (Determine) | ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல் | கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிபு செய்தல் |
| | செயல் விளக்கமளிக்குக (Demonstrate) | ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல் | கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல் |
| | தயாரிக்க (Prepare) | பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல் |
| | பயன்படுத்துக (Use) | ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல் | தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல் |
| | முன்வைக்குக (Present) | தகவல்களை பயனுறுதி மிக்க வகையில் பகிர்தல் | பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல் |

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு**<br><br>தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல் | பகுப்பாய்வு செய்க (Analyse) | ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல் | சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல் |
| | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல் | பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல் |
| | பிரித்தறிக (Distinguish) | தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல் | பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல் |
| | பரீட்சிக்க / சோதிக்க (Examine) | ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல் | ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல் |
| | கோடிட்டுக் காட்டுக (Outline) | பிரதான விடயங்களின் பொழிப்பு | பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல் |
| | நடத்துக (Conduct) | ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல் |
| | அறிக்கையிடுக (Report) | கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு | பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல் |
| **மதிப்பீடு**<br><br>தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படையில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல் | ஆலோசனை வழங்குக (Advise) | யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல் | பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல் |
| | மதிப்பீடு செய்க (Evaluate) | பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு | தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்புடைமையை மதிப்பிடுதல் |
| | அமைக்குக (Formulate) | ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி | நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல் |
| | பரிந்துரை செய்க (Recommend) | பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல் | தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல் |
| **உருவாக்குதல்**<br><br>ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல் | உருவாக்குக (Create) | புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல் | அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல் |
| | மதிப்பிடுக (Assess) | தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல் | கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல் |
| | விருத்தி செய்க (Develop) | ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக்கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம் | காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல் |
| | முன்மொழிக (Propose) | கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல் | ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல் |
| | இணைப்பாக்கம் செய்க (Synthesis) | ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல் | பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல் |
| | வடிவமைக்குக (Design) | ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல் | ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல் |
| | தொகுக்குக (Compile) | பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல் | சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல் |

இலங்கை

கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2025

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# மட்டம் 02

## 2801 – நிதி மற்றும் கிரயக் கணக்கீடு (FCA)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQ)**
10 கட்டாய வினாக்கள்
(மொத்தம் 25 புள்ளிகள்)

**பகுதி A**

***வினா 01 இற்கான விடை***

**1.1** (2) **1.2** (4) **1.3** (1) **1.4** (3) **1.5** (3)

**(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)**

**1.6** ABC முறைமையில், உற்பத்திச் செயன்முறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு செயற்பாடுகளுக்குமான கிரயங்கள் முதலில் கண்டறியப்படுகின்றன. பின்னர் தனித்தனியான பொருள்களுக்கான ஒவ்வொரு செயற்பாட்டினதும் பாவனையின் அடிப்படையில் அவற்றுக்கு விலை அறவிடப்படுகின்றன.

**அல்லது**

ABC என்பது தொடர்புடைய பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான மேந்தலைகள் மற்றும் நேரில் கிரயங்களை ஒதுக்குகின்ற கிரயமிடல் முறை ஆகும்.

**(02 புள்ளிகள்)**

**1.7**

**VAT கட்டுப்பாட்டுக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| கொள்வனவுகள் | 25,280 | B/B/F | 24,000 |
| விற்பனைப் பெறுவனவு | 4,221 | விற்பனை | 246,060 |
| B/C/F | 140,559 | | |
| | **270,060** | | **270,060** |

**(03 புள்ளிகள்)**

**1.8** *(ரூ.)*

| | | | |
|---|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் (வரவு) | 400,000 | - |
| மூலதனக் கணக்கு **A** (செலவு) | - | 240,000 |
| மூலதனக் கணக்கு **B** (செலவு) | - | 160,000 |
| (நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீள்மதிப்பீடு கணக்கு இருக்கிறது) | | |

**(03 புள்ளிகள்)**

**1.9**

**களஞ்சியப் பேரேடு**

| திகதி | விபரம் | பெறுவனவுகள் | | | வழங்கல்கள் | | | மீதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எ/கை | அலகு விலை (ரூ.) | பெறுமதி (ரூ.) | எ/கை | அலகு விலை (ரூ.) | பெறுமதி (ரூ.) | எ/கை | அலகு விலை (ரூ.) | பெறுமதி (ரூ.) |
| 01.12.2025 | ஆரம்ப இருப்பு | 100 | 10 | 1,000 | - | - | - | 100 | 10.00 | 1,000 |
| 05.12.2025 | கொள்வனவு | 200 | 13 | 2,600 | - | - | - | 300 | 12.00 | 3,600 |
| 10.12.2025 | வழங்கல் | - | - | - | 150 | 12 | 1,800 | 150 | 12.00 | 1,800 |
| 15.12.2025 | கொள்வனவு | 100 | 14 | 1,400 | - | - | - | 250 | 12.80 | 3,200 |

2025 டிசெம்பர் 31 இல் இறுதி இருப்பு :

- அலகுகள் = **250**
- அலகொன்றின் சராசரிக் கிரயம் = **ரூ. 12.80**
- இறுதி இருப்பின் பெறுமதி = 250 × 12.80 = **ரூ. 3,200/-** **(04 புள்ளிகள்)**

**1.10**

| | |
|---|---|
| நேர் பொருள் (300 x 8,500) | 2,550,000 |
| நேர் கூலி – **பிரிவு A** (800 x 450) | 360,000 |
| – **பிரிவு B** (900 x 800) | 720,000 |
| உற்பத்தி மேந்தலைகள் (1,080,000 x 120%) | 1,296,000 |
| மொத்தக் கிரயம் | 4,926,000 |
| இலாப எல்லை @ 20% | 1,231,500 |
| **வசூலிக்கப்பட வேண்டிய விலை** | **6,157,500** |

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

***பகுதி A முடிவு***

**ஐந்து கட்டாய வினாக்கள்**

**பகுதி B**

(மொத்தம் 50 புள்ளிகள்)

## *வினா 02 இற்கான விடைகள்*

**அலகு 5** **- கிரயக் கணக்கீடு**

கற்றற் பேறுகள் - பொருள் கட்டுப்பாட்டில் பயன்படுத்தப்படும் நடைமுறைகளை விபரித்தல். EOQ உட்பட இருப்பு தொடர்பான கிரயங்கள் மற்றும் இருப்பு மட்டங்களைக் கணிப்பிடுதல்.

- கூலியில் பயன்படுத்தப்படும் நடைமுறைகளை இனங்காணுதல், கூலிக் கிரயத்தைக் கணிப்பிடுதல்.

**(A)** **(a)**

$$EOQ = \sqrt{\frac{2DC_0}{C_h}}$$

$$= \sqrt{\frac{2 \times 11,250 \times 500}{5}}$$

$$= \sqrt{\frac{11,250,000}{5}}$$

$$= \sqrt{2,250,000}$$

= **<u>1,500 அலகுகள்</u>** **(02 புள்ளிகள்)**

**(b)** மறு - கட்டளை மட்டம் = உயர்ந்தபட்சப் பாவனை x உயர்ந்தபட்ச கட்டளைக் காலம்

= 300 x 6 = **<u>1,800 அலகுகள்</u>** **(02 புள்ளிகள்)**

**(c)** ஆகக்குறைந்த இருப்பு மட்டம் = ROL - (சராசரி கட்டளைக் காலம் x சராசரிப் பாவனை)

சராசரிப் பாவனை = (200 + 300) / 2 = 250

சராசரி கட்டளைக் காலம் = (4 + 6) / 2 = 5

= 1,800 - (250 x 5)

= **<u>550 அலகுகள்</u>** **(02 புள்ளிகள்)**

**(B)**

| | **ரூ.** |
|---|---|
| அடிப்படைச் சம்பளம் (40 x 180) | 7,200 |
| மிகையூதியம் – **(W-1)** (150% x 180 x 5) | 1,350 |
| **மொத்தச் சம்பாத்தியம்** | **8,500** |

**(W-1) மிகையூதியக் கணக்கு**

| | ரூ. |
|---|---:|
| 180 அலகுகளைத் தயாரிப்பதற்கான நியம மணித்தியாலங்கள்<br>(15 நிமிடங்கள் x 180 அலகுகள் / 60) | 45 |
| உண்மையான மணித்தியாலங்கள் | 40 |
| **சேமிக்கப்பட்ட மணித்தியாலங்கள் / (மேலதிகமாகச் செலவழிக்கப்பட்டது)** | **5** |

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## *வினா 03 இற்கான விடைகள்*

**அலகு 5** - கிரயக் கணக்கீடு

கற்றற் பேறுகள் - ஒதுக்கீடு, பகிர்வு, மீள்-பகிர்வு, மேந்தலைகளின் உறிஞ்சல் ஆகியவற்றை விபரித்தல், கணிப்பீடு செய்தல்.

- மேந்தலைகள் எவ்வாறு ஒதுக்கப்பட்டு, பகிரப்படுகின்றன என்பது பற்றிய கூற்றைத் தயாரித்தல்.

**(a)** *(ரூ.)*

| உருப்படி | ஒதுக்கீட்டு அடிப்படை | உற்பத்தி / சேவை | | | மொத்தம் |
|---|---|---:|---:|---:|---:|
| | | **A1** | **A2** | **S1** | |
| நேரில் பொருள்கள் | ஒதுக்கீடு | 600,000 | 700,000 | 200,000 | 1,500,000 |
| மின்சாரம் | மின்சாரப் பாவனை (கிரோவாற்று) | 270,000 | 189,000 | 81,000 | 540,000 |
| வாடகை | தரைப் பரப்பு (சதுர அடி) | 84,000 | 105,000 | 21,000 | 210,000 |
| ஊழியர் சேமநலன் | ஊழியர்கள் எண்ணிக்கை | 108,000 | 135,000 | 27,000 | 270,000 |
| இயந்திரத் தேய்மானம் | இயந்திரப் பெறுமதி | 30,000 | 37,500 | 22,500 | 90,000 |
| கட்டடக் காப்புறுதி | தரைப் பரப்பு (சதுர அடி) | 72,000 | 90,000 | 18,000 | 180,000 |
| இயந்திரக் காப்புறுதி | இயந்திரக் கிரயம் | 40,000 | 50,000 | 30,000 | 120,000 |
| **மொத்த மேந்தலைக் கிரயங்கள்** | | **1,204,000** | **1,306,500** | **399,500** | **2,910,000** |
| சேவைப் பிரிவு **S1** | | 239,700 (60%) | 159,800 (40%) | (399,500) | - |
| **உற்பத்திப் பிரிவுகளின் மொத்த மேந்தலைக் கிரயங்கள்** | | **1,443,700** | **1,466,300** | **-** | **2,910,000** |

**(07 புள்ளிகள்)**

**(b)** முதன்மைக் கிரயம் 360.00

| | | |
|---|---|---|
| மேந்தலை | - $A_1$ (3 x 80.20) | 240.60 |
| | - $A_2$ (2 x 122.19) | 240.38 |
| | **மொத்தக் கிரயம்** | **840.98** |

**செய்முறை:**

| | $A_1$ | $A_2$ |
|---|---|---|
| மேந்தலை உறிஞ்சல் வீதம் | 1,443,700/18,000 | 1,466,300/12,000 |
| | **ரூ. 80.20** | **ரூ. 122.19** |

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## *வினா 04 இற்கான விடைகள்*

**அலகு 2 -** பங்குடமைக்கான நிதிக் கூற்றுக்கள்

கற்றற் பேறுகள் - பங்குடமையின் இலாப/ நட்டப் பகிர்வு, பங்காளர்களின் மூலதனக் கணக்குகள், பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகளைத் தயாரித்தல்.

**(a)**

**DTK Escapes**

**2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**

**இலாப, நட்டப் பகிர்வுக் கணக்கு** *(ரூ.)*

| | | |
|---|---|---|
| ஆண்டிற்கான நிகர இலாபம் | | 5,100,000 |
| கழி : கடனுக்கான வட்டி – **தனுக்க** (10% × 1,800,000 x 6 / 12) | 90,000 | |
| கழி: **தரிந்துவுக்குச்** செலுத்த வேண்டிய வாகன வாடகை (60,000 × 3) | 180,000 | (270,000) |
| **சீராக்கப்பட்ட நிகர இலாபம்** | | **4,830,000** |
| **கசுனுக்கான** சம்பளம் (80,000 × 12) | | (960,000) |
| **கழி : மூலதனம் மீதான வட்டி :** | | |
| **தனுக்க** (8% x 1,200,000) | 96,000 | |
| **தரிந்து** (8% x 900,000) | 72,000 | |
| **கசுன்** (8% x 600,000) | 48,000 | (216,000) |
| **இலாபப் பங்கு :** | | |
| **தனுக்க** | 1,827,000 | |
| **தரிந்து** | 1,218,000 | |
| **கசுன்** | 609,000 | (3,654,000) |
| | | - |

**(04 புள்ளிகள்)**

**(b)**

**பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள்** *(ரூ.'000)*

| | **தனுக்க** | **தரிந்து** | **கசுன்** | | **தனுக்க** | **தரிந்து** | **கசுன்** |
|---|---|---|---|---|---|---|---|
| எடுப்பனவுகள் | 500 | - | 350 | சம்பளங்கள் | - | - | 960 |
| மூலதனக் கணக்கு | - | - | 1,267 | வாடகை | - | 180 | - |
| இறுதி மீதி | 1,603 | 1,470 | - | கடன் வட்டி | 180 | - | - |
| | | | | மூலதனம் மீதான வட்டி | 96 | 72 | 48 |
| | | | | இலாபப் பங்கு | 1,827 | 1,218 | 609 |
| | **2,103** | **1,470** | **1,617** | | **2,103** | **1,470** | **1,617** |

**பங்காளர்களின் மூலதனக் கணக்குகள்** *(ரூ.'000)*

| | **தனுக்க** | **தரிந்து** | **கசுன்** | | **தனுக்க** | **தரிந்து** | **கசுன்** |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | 2,700 | 900 | - | B/B/F | 1,200 | 900 | 600 |
| கடன் | - | - | 2,467 | நடைமுறை | - | - | 1,267 |
| B/C/F | 300 | 1,200 | - | நன்மதிப்பு | 1,800 | 1,200 | 600 |
| | **3,000** | **2,100** | **2,467** | | **3,000** | **2,100** | **2,467** |

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## *வினா 05 இற்கான விடைகள்*

**அலகு 4 - பூரணமற்ற பதிவுகளைப் பயன்படுத்தி நிதிக் கூற்றுக்கள், மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கான நிதிக் கூற்றுக்கள்**

கற்றற் பேறுகள் - கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பொருத்தமான நிதி அறிக்கையிடல் வேலைச் சட்டகத்தைப் பயன்படுத்தி இலாப நோக்கற்ற நிறுவனத்திற்கான ஒரு தொகுதி நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.

**(a)** **அங்கத்துவச் சந்தாக் கணக்கு** *(ரூ.)*

| | | | |
|---|---|---|---|
| 01/01/2025 B/B/F (10 x 3,000) | 30,000 | பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் | 1,638,000 |
| வருமான, செலவினக் கணக்கு (540 x 3,000) | 1,620,000 | 31/12/2025 B/C/D (6 x 3,000) | 18,000 |
| B/C/D (31/12/2025)(2 x 3,000) | 6,000 | | |
| | **1,656,000** | | **1,656,000** |
| 01/01/2026 B/B/F | 18,000 | 01/01/2026 B/C/F | 6,000 |

**(04 புள்ளிகள்)**

**(b)**

**கோல்டன் ஸ்டார் விளையாட்டுக் கழகம்**
**2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**வருமான, செலவினக் கணக்கு** *(ரூ.'000)*

| | |
|---|---|
| **வருமானம் :** | |
| அங்கத்துவச் சந்தாக் கட்டணம் | 1,620,000 |
| உணவக இலாபம் (420,000 – 280,000) | 140,000 |
| **மொத்த வருமானம்** | **1,760,000** |
| **செலவினங்கள் :** | |
| சம்பளங்கள் | 100,000 |
| பழுதுபார்ப்புகளும் பராமரிப்பும் | 25,000 |
| பயன்பாடுகள் (30,000 + 5,000) | 35,000 |
| தேய்மானம் – விளையாட்டு உபகரணம் (20% x 75,000) | 50,000 |
| அலுவலக உபகரணம் மீதான தேய்மானம் (20% x 20,000 x 6/12) | 2,000 |
| **மொத்தச் செலவினங்கள்** | **177,000** |
| **மிகை** | **1,583,000** |

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## *வினா 06 இற்கான விடைகள்*

**அலகு 4 - பூரணமற்ற பதிவுகளைப் பயன்படுத்தி நிதிக் கூற்றுக்கள், மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கான நிதிக் கூற்றுக்கள்**

கற்றற் பேறுகள் - பூரணமற்ற பதிவுகளின் அடிப்படையில் பரீட்சை மீதியையும் நிதிக் கூற்றுக்களையும் தயாரித்தல்.

**(a)**

**சேனக என்டபிரைசஸ்**
**2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**முற்றடக்க வருமானக் கூற்று** *(ரூ.'000)*

| | | |
|---|---|---|
| விற்பனை **(W-2)** | | 762,000 |
| (-) **விற்பனைக் கிரயம் :** | | |
| ஆரம்பத் தொக்கு | 80,000 | |
| கொள்வனவுகள் **(W-3)** | 495,000 | |
| இறுதி இருப்பு | (90,000) | (485,000) |
| **மொத்த இலாபம்** | | **277,000** |
| **செயற்பாட்டுச் செலவினங்கள் :** | | |
| செயற்பாட்டுச் செலவினம் (120,000 – 15,000) | 135,000 | |
| தேய்மானம் | 10,000 | |
| கடன் வட்டி | 8,000 | (153,000) |
| **நிகர இலாபம்** | | **124,000** |

**(06 புள்ளிகள்)**

**(b)** 2025 மார்ச் 31 இல் மூலதனம் = 187,000 + 124,000 – 40,000

= **<u>271,000</u>** **(04 புள்ளிகள்)**

**செய்முறை :**

**(W-1)**

**2024 ஏப்ரல் 01 இல் அலுவல்கள் கூற்று**

| | | | |
|---|---|---|---|
| வியாபார சென்மதிகள் | 40,0000 | வியாபார வருமதிகள் | 60,000 |
| வங்கிக் கடன் | 50,000 | தொக்கு | 80,000 |
| 2024.04.01 இல் மூலதனம் | **187,0000** | தளபாடமும் பொருத்துகளும் | 100,000 |
| | | காசும் வங்கி மீதியும் | 37,000 |
| | **277,000** | | **277,000** |

**(W-2)** **வியாபார வருமதிகள் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| 01/04/2024 – B/B/F | 60,000 | காசு | 750,000 |
| விற்பனை | 762,000 | 31/03/2025 – B/C/D | 72,000 |
| | **822,000** | | **822,000** |
| 01/04/2025 B/B/F | 72,000 | | |

**(W-3)** **கொள்வனவுக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| காசு | 500,000 | 01/04/2024 B/B/F | 40,000 |
| 31/03/2025 B/C/D | 35,000 | கொள்வனவுகள் | 495,000 |
| | **535,000** | | **535,000** |
| | | 01/04/2024 B/B/F | 35,000 |

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## *பகுதி B முடிவு*

## ஒரு (01) கட்டாய வினா

(மொத்தம் 25 புள்ளிகள்)

**பகுதி C**

***வினா 07 இற்கான விடைகள்***

**அலகு 1 -** நிதிக் கூற்றுக்களின் கூறுகள் மற்றும் பகுதிகளும், நிதிக் கூற்றுக்களுக்கான சீராக்கங்களும்

**அலகு 3 -** பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிக்கான நிதிக் கூற்றுக்கள்

கற்றற் பேறுகள் - இலங்கை கணக்கீட்டு நியமங்களின்படி (LKAS 2, LKAS 8, LKAS 10, LKAS 16, and LKAS 37), தேவையான கணக்கீட்டுச் செய்கைகள் மற்றும் வெளிப்படுத்தலை விபரித்து, கணிப்பிடுதல்.

- பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிக்கான நிதிக் கூற்றுக்களின் தொகுதி யைத் தயாரித்தல். (உள்ளக முகாமையின் நோக்கத்திற்காக மாத்திரம்).

**(a)** **Pinewell (Pvt) Ltd.**

**2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**

**இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று** *(ரூ.'000)*

| | | |
|---|---|---|
| விற்பனை | | 6,340 |
| விற்பனைக் கிரயம் (2,655 + 20) | | (2,675) |
| **மொத்த இலாபம்** | | **3,665** |
| விநியோகச் செலவினங்கள் **(W-3)** | 512 | |
| நிருவாகச் செலவினங்கள் **(W-4)** | 2,050 | |
| நிதிச் செலவினங்கள் **(W-5)** | 90 | (2,652) |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 1,013 |
| வருமான வரி | | (427) |
| **மொத்த முற்றடக்க வருமானம்** | | **586** |

**(13 புள்ளிகள்)**

**(b)** **Pinewell (Pvt) Ltd.**

**2025 மார்ச் 31 இல்**

**நிதி நிலைக் கூற்று** *(ரூ.'000)*

| | | |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் **(W-1)** | | 2,810 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்கு | 700 | |
| வியாபார வருமதிகள் **(W-2)** | 1,178 | |
| முன் - செலுத்திய காப்புறுதி | 40 | |
| வங்கி மீதி | 390 | 2,308 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **5,118** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 2,000 | |
| பொது ஒதுக்கம் (100 + 500) | 600 | |
| கைக்கொள் இலாபம் (400 + 586 - 500) | 486 | 3,086 |
| | | |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| வங்கிக் கடன் | | 750 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 750 | |
| வங்கிக் கடன் | 250 | |
| கணக்காய்வுக் கட்டணம் - செலுத்த வேண்டியது (40 + 50) | 90 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 102 | |
| செலுத்த வேண்டிய வட்டி | 90 | 1,282 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | **5,118** |

**செய்முறை:**

**(W-1)** **ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** *(ரூ.'000)*

| **கிரயம் :** | | | | |
|---|---|---|---|---|
| **சொத்து வகை** | **01/04/2024 இல் மீதி** | **சேர்த்தல்கள் / மீள்மதிப்பீடுகள்** | **அகற்றல்கள்** | **31/03/2025 இல் மீதி** |
| காணி | 1,200 | - | - | 1,200 |
| கட்டடம் | 800 | - | - | 800 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,800 | - | - | 1,800 |
| | **3,800** | **-** | **-** | **3,800** |
| **திரண்ட தேய்மானம் :** | | | | |
| **சொத்து வகை** | **01/04/2024 இல் மீதி** | **ஆண்டிற்கான கட்டணம்** | **விற்பனை** | **31/03/2025 இல் மீதி** |
| காணி | - | - | - | - |
| கட்டடம் | 100 | 40 | - | 140 |
| பொறி மற்றும் இயந்திரம் | 400 | 450 | - | 850 |
| | **500** | **490** | **-** | **990** |
| **எழுதப்பட்ட பெறுமதி** | | | | **2,810** |

**(W-2)** **அறவிட முடியாக் கடன் ஏற்பாடு / வியாபார வருமதிகளுக்கான விடுதொகை**

| | **ரூ. '000** |
|---|---|
| வியாபார வருமதிகள் மீதி | 1,300 |
| கழி : அறவிட முடியாக் கடன்கள் | (60) |
| மீதி | 1,240 |
| வியாபார வருமதிகள் ஏற்பாட்டிற்கான விடுதொகை 6% (240 x 5%) | (62) |
| | **1,178** |

**(11 புள்ளிகள்)**

**(W-3) விநியோகச் செலவினங்கள்**

| | |
|---|---:|
| அறவிடமுடியாக் கடன் | 60 |
| அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாடு (62 – 50) | 12 |
| விற்பனைத் தரகு | 220 |
| விளம்பரப்படுத்தல் | 220 |
| | **512** |

**(W-4) நிருவாகச் செலவினங்கள்**

| | |
|---|---:|
| தேய்மானம் - கட்டடம் | 40 |
| தேய்மானம் – பொறி மற்றும் இயந்திரம் | 450 |
| காப்புறுதி (150 – 40) | 110 |
| வாடகை (180 + 20) | 200 |
| கணக்காய்வுக் கட்டணம் | 50 |
| அச்சிடலும் காகிதாதியும் | 180 |
| மின்சாரம் | 120 |
| சம்பளங்களும் கூலிகளும் | 900 |
| | **2,050** |

**(W-5) நிதிச் செலவினங்கள்**

| | |
|---|---:|
| வட்டி வருமானம் (1,000 x 12% x 9/12) | 90 |
| | **90** |

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

***பகுதி C முடிவு***